

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், ஆசியக் கோப்பை கால்பந்து போட்டிக்கு 22 ஆண்டுகளுக்கு பிறகு தகுதி பெற்ற இந்திய அணியில் இடம்பெற்றுள்ள தமிழகத்தை சேர்ந்த கால்பந்து வீராங்கனைகள் செல்வி கார்த்திகா மற்றும் செல்வி பிரியதர்ஷிணி ஆகியோருக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து தலா 1.50 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், மதுரை மாவட்டத்தில் 9.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை வளைகோல் பந்து மைதானம் புதுப்பிக்கும் பணிக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 10.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், அரியலூர் மாவட்டத்தில் 10.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் புதிய செயற்கை வளைகோல் பந்து மைதானம் அமைக்கும் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மதுரை மாவட்டத்தில் 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைவிங் வசதியுடன் கூடிய நீச்சல் குளம், கரூர் மாவட்டத்தில் 6.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நீச்சல் குளம் அமைக்கும் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 7.95 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டத்தில் 7.93 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் புதிய விளையாட்டு விடுதி அமைக்கும் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், 52வது சீனியர் தேசிய கேரம் சாம்பியன்ஷிப் –2025 போட்டியில் பதக்கம் வென்ற தமிழ்நாடு ஆண்கள் மற்றும் பெண்கள் அணியினரை வாழ்த்தி, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 2.00 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், ராணி மேரி கல்லூரியில் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 20.00 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை கல்லூரி முதல்வர் முனைவர் பி. உமாமகேஸ்வரியிடம் வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம்!

# பொதுமக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்!

## வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, ஜுலை 13

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், ‘பொதுமக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்’ என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-




**உங்கள் குறைகளைத் தீர்க்க அரசு அலுவலர்கள் உங்கள் இல்லங்களுக்கே வந்து மனுக்களைப் பெற்று, அதனைத் தொடர்ந்து நடைபெறும் 10,000 “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்கள் மூலம் ஊரகப் பகுதிகளில் 46 சேவைகளும் நகர்ப்புறப் பகுதிகளில் 43 சேவைகளும் வழங்கப்பட உள்ளன!**

**பொதுமக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், சமீபத்தில் கென்யாவில் நடைபெற்ற திறந்தவெளி கிராவல் வேர்ல்டு சீரீஸ் பந்தையத்தில் 6 வது இடம் பிடித்து 2025 அக்டோபர் 11–12 தேதிகளில் நெதர்லேண்டில் நடைபெறவுள்ள UCI உலக கிராவல் சாம்பியன்போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை பெற்ற தமிழ்நாடு சைக்கிளிங் வீரர் ஸ்ரீநாத் லஷ்மிகாந்த்க்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 2.00 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை நகராட்சி நிருவாக இயக்குநரக கூட்டரங்கில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், நேற்று முன்தினம் (11.07.2025) அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் செயலாக்கம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர் இராஜேந்திர ரத்னூ, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிருவாக இயக்குநர் கே.விவேகானந்தன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் ப. மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகள் இயக்குநர் எம். பிரதீப் குமார், மற்றும் தலைமைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், மண்டல பொறியாளர்கள் மற்றும் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’ நிதியிலிருந்து

# சிறந்த விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.36.08 இலட்சம் உதவித்தொகை!

## காசோலைகளையும் – விளையாட்டு உபகரணங்களையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜுலை 13-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.36.08 இலட்சம் உதவித்தொகை காசோலைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள், உலகின் எப்பகுதியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ள பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை ஏற்படுத்தி விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்களுக்கு தேவையான அதிநவீன உபகரணங்களை வாங்கி கொள்ளவும், தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவு, தங்குமிடம், பயிற்சி பெறுதல், பயணத்திற்கான செலவுகளை மேற்கொள்ள தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து நிதிஉதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், ராணி மேரி கல்லூரியில் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 20.00 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை கல்லூரி முதல்வர் முனைவர் பி. உமாமகேஸ்வரியிடம் வழங்கினார்.

தேசிய அளவில் பதக்கம் வென்ற சைக்கிள் வீரர் பிரஜித்திற்கு 9,08,999 ரூபாய் மதிப்பீட்டிலான அதிநவீன பந்தைய சைக்கிள் உபகரணத்தை வழங்கினார்.

தொடர்ந்து, சமீபத்தில் கென்யாவில் நடைபெற்ற திறந்தவெளி கிராவல் வேர்ல்டு சீரீஸ் பந்தையத்தில் 6 வது இடம் பிடித்து 2025 அக்டோபர் 11-12 தேதிகளில் நெதர்லாந்தில் நடைபெறவுள்ள UCI உலக கிராவல் சாம்பியன்போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்ற தமிழ்நாடு சைக்கிளிங் வீரர் ஸ்ரீநாத் லஷ்மிகாந்த்க்கு 2.00 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

மேலும், ஆசியக் கோப்பை கால்பந்து போட்டிக்கு 22 ஆண்டுகளுக்கு பிறகு தகுதி பெற்ற இந்திய அணியில் இடம்பெற்றுள்ள தமிழகத்தை சேர்ந்த கால்பந்து வீராங்கனைகள் செல்வி கார்த்திகா மற்றும் செல்வி பிரியதர்ஷிணி ஆகியோருக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

52வது சீனியர் தேசிய கேரம் சாம்பியன்ஷிப் - 2025 போட்டியில் பதக்கம் வென்ற தமிழ்நாடு ஆண்கள் மற்றும் பெண்கள் அணியினரை வாழ்த்தி, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 2.00 இலட்சம் ரூபாய்க்கான காசோலை உட்பட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 36.08 இலட்சம் உதவித்தொகை காசோலைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பயிற்சியாளர்கள், விளையாட்டு சங்க நிர்வாகிகள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.